**O.S. 55/2018, 21.10.2021, 03.35 pm - 03.50 pm**

**வா.சா.1, வெங்கடாசலம், த/பெ.பெருமாள் நாயுடு**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

நான் கிரையம் பெற்ற சொத்திற்கான அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கான காரணத்தை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் ராஜவேலுவிடம் வாங்கினேன். ராஜவேலுவின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். பி.சி.ராஜவேல் அவர்களின் அசல் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராஜவேல் அவர்களின் அசல் ஆவணத்தை நான் இதுநாள் வரை பார்க்கவில்லை என்று சொன்னால் பார்த்துள்ளேன். அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு இதுநாள்வரை தெரியுமா என்றால் தெரியாது. அசல் ஆவணத்தை பார்க்காமல் போர்ஜரியாக நான் ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜவேல் அவர்களின் பட்டாவை வைத்து தான் நான் ஆவணத்தை பதிவு செய்துள்ளேனா தவிர அவரின் அசல் ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்ற விவரத்தை வழக்கறிஞரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.வழக்கு சொத்தில் இன்றைய தேதிவரை என்ன உள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் காலி நிலமாக தான் இருந்தது, 5, 6 வருடத்திற்கு முன்பாக தென்னை செடி வைத்துள்ளேன். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்யும்போது நான் அங்கு இருந்தேன் என்று சொன்னால் இல்லை. வழக்கு சொத்தில் 50லிருந்து 55 வருடம் வயதுள்ள தென்னை மரங்கள் உள்ளது என்றும், நான் தாவா சொத்தை பார்க்காததால் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வட்டாட்சியரிடம் சுவாதீன சான்று வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் தாவா சொத்தில் என்ன பயிர் உள்ளது என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். சுவாதீன சான்று யாரிடமிருந்து பெற்றேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்றேன். 2012-ற்கான சுவாதீன சான்று வாங்கியுள்ளேன். இன்றைய தேதிவரை தாவா சொத்திற்கான ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய தகப்பனாரான பெருமாள் பெயரில் உள்ளது. 2ம் பிரதிவாதிக்கு உயில் மூலமாக தாவா சொத்து பாத்தியப்பட்டு அதனடிப்படையில் அனைத்து ஆவணங்களும் மாற்றப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் 1ம் பிரதிவாதியான ராமமூர்த்திக்கு பாத்தியப்பட்டது ஆகும். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்ய உரிமை அல்ல என்றும், நான் தவறாக கிரையம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து

முழுவதும் சக்கரவர்த்திக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனடிப்படையில் உயில் மூலமாக 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், எனவே 2ம் பிரதிவாதிக்கு தான் தாவா சொத்தில் முழு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.